பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 60

சனிக்கிழமை
25 ஜனவரி 2025

தை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பெருமளவு கஞ்சா பலாலியில் மீட்பு!
### ஒருவர் கைது!

மன்னார், ஜன. 25
இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்திவரப்பட்ட 111 கிலோ 995 கிராம் எடையுள்ள கேரளக் கஞ்சாவுடன் 15



## சுகிர்தராஜனின் படுகொலைக்கு நீதிகோரி நேற்றுப் போராட்டம்!

திருகோணமலை, ஜன. 25
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு 15

எம்.பி.க்களையும் உள்ளடக்கி
## அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்தத் தனிக்குழு

கொழும்பு, ஜனவரி 25
வடக்குக் கடற்பரப்பில் இடம்பெறும் அத்துமீறிய மீன்பிடி, வடமாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் இதர பிரச்சினை 15

# இராணுவத்தினரால் வாழ்வாதாரம் பறிப்பு

### அழகக நிலையத்தினர் ஆளுநரிடம் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், ஜனவரி 25**
**இராணுவத்தினரால் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சியில் அழகக நிலையங்கள் இயக்கப்படுவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வடமாகாண அழகக சங்கத்தினர் வடக்கு ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர்.** 15

நான்கு அம்சக் கோரிக்கைகளுடன்
## யாழ். பல்கலை மாணவர்கள் உணவுத்தவிர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25
மாணவர்கள் மீதான பழிவாங்குதல்களை உடன் நிறுத்த வலியுறுத்தியும், நான்கு அம்சக் கோரிக்கைகளை 15

## காற்றாலை ஒப்பந்தத்தை நிறுத்தவில்லை இலங்கை
### அதானி குழுமம் அறிக்கை

கொழும்பு, ஜன. 25
மன்னார் பூநகரியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின்திட்டத்தை இலங்கை அரசாங்கம் நிறுத்தவில்லை என்று அதானி குழுமம் அறிவித்துள்ளது. அதானி குழுமத் 15



## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளியில் நேற்று ஆரம்பம்
### பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளியில் நேற்று ஆரம்பமாகியது. வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். 15

பாதுகாப்புக் குறைப்பு:
## நீதிமன்றத்தில் மஹிந்த மனு!

கொழும்பு, ஜன. 25
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். 15

## மாமியாரைக் கொல்ல முயன்றவர் மைத்துனரால் வெட்டிக்கொலை
### வவுனியா சுந்தரபுரத்தில் பதறவைக்கும் சம்பவம்

வவுனியா, ஜன. 25
வவுனியா – சுந்தரபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். 15

## பொலிஸாருக்கு எதிராக 2,863 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜன. 25
2024ஆம் ஆண்டு பொலிஸாரின் முறைதவறிய செயற்பாடுகள் தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு 2 ஆயிரத்து 863 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொதுமக்கள் முன்வைத்த முறைப் 15



‘அதானியைக் கலைப்பம் எண்டவை இப்ப என்ன சொல்லப் போயினமோ?’

## கலாசார மண்டபத்தில் மீண்டும் யாழ்ப்பாணம்!
### யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என்ற பெயருடன் புதிய பெயர்ப்பலகை திறப்பு




யாழ்ப்பாணம், ஜன. 25
இந்தியாவின் நிதி உதவியில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்துக்கு இரண்டாவது முறையாகப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அந்தக் கட்டடத்துக்கு மூன்றாவது பெயர் சூட்டப்பட்டுள்ளது. 15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
15 EDITION
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்று இரண்டாம் நாள்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கைப்பாவையான குற்றப்புலனாய்வுப் பிரிவு

## சம்பிக்க சாட்டை

**கொழும்பு, ஜன.25**

**அரசாங்கத்தின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக முன்னாள் அமைச்சர் அநுரபிரிதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அரசாங்கம் இவ்வாறு செயற்படுமானால் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்து மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் என்று கூறியே இவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்றனர். இலத்திரனியல் வீசா ஊழலில் 320 கோடி ரூபா இழக்கச் செய்த அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இவ்வாறு மிக முக்கியத்துவம்வாய்ந்த எந்தவொரு குற்றச்செயல்கள் தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இவற்றைத் தவிர்த்து முன்னாள் அமைச்சர் அநுர யாபா மற்றும் அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது முற்று முழுதாக அரசியல் பழி வாங்கலாகும்.நாட்டை வங்குரோத்தடையச் செய்த உண்மையான குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அன்றி, இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களுக்காக இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணையை வழங்கவில்லை. குற்றப்புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்தின் கைப்பாவையாகியுள்ளது. முழு உலகும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது - என்றார். (எ-இ)

## ஐ.தே.க. - ஐ.ம.ச. இணைய சின்ன சர்ச்சையால் இழுபறி!

கொழும்பு, ஜன.25

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், சின்னம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையால் இணக்கப்பாட்டை எட்டுவதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இருதரப்பும் ஒரு கூட்டணியாக இணையும் பட்சத்தில் உள்ளாட்சிசபைத் தேர்தலை யானை சின்னத்தில் எதிர்கொள்ளவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் யோசனை முன்வைக்கப்பட் டுள்ளது. அதை ஏற்க மறுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி, தொலைபேசிச் சின்னமே கூட்டணியின் சின்னமாகவும் இருக்கவேண்டும் எனவும் தற்போதுகூட ஐக்கிய மக்கள் கூட்டணியின் சின்னமாக தொலைபேசியே உள்ளது எனவும் தெரிவித்துள்ளது. அதையடுத்து பொதுச்சின்னம் தொடர்பான யோசனை ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கும் சஜித் அணி இணக்கம் தெரிவிக்கவில்லை என அறியமுடிகின்றது.

உள்ளாட்சிசபைத் தேர்தலில் பொதுச்சின்னத்தை பரிசீலிக்கக்கூடாது எனவும், அடுத்த தேசிய தேர்தலை இலக்குவைத்து பொதுச்சின்னம் பற்றி பரிசீலிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இதனால் இருதரப்புப் பேச்சு இழுபறி நிலையை நோக்கி நகர்கின்றது என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-44)

## முதலீட்டாளர்கள் முண்டியடிப்பாம்

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

நாட்டில் முதலீடு செய்வதற்காக பெருமளவு முதலீட்டாளர்கள் தமது திட்டங்களை முன்வைத்துள்ளனர். அந்தத் திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உற்பத்தியை அதிகரிப்பது அவசியமாகும். இந்த வருடத்தில் மீண்டெழும் செலவினமாக 1,315 பில்லியன் ரூபா வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் வேலைத் திட்டங்கள் விரைவுபடுத்தப் பட்டுள்ளன. ஏனைய வலயங்களை இனங்காணுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## புலமைப்பரிசில் பரீட்சை சித்தி வீதத்தில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.25

2024 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 16.05 சதவீத மாணவர்கள் வெட்டுபுள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். அதிகூடிய புள்ளியாக 188 பெறப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 77.75 சதவீத மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்த நிலையில் இம்முறை 77.96 வீதமான மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

37.70 வீதமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். கடந்த வருடம் 45.06 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தனர். 16.05 வீதமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சித்தி வீதம் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 15.22 சதவீதமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றிருந்தனர் - என்றார். (எ-44)

# ரோஹிங்யரை நாடுகடத்தல் அரசு தீர்மானிக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு!

கொழும்பு, ஜன. 25

இலங்கைக்குள் நுழைந்துள்ள ரோஹிங்யர்களை நாடுகடத்துவது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ரோஹிங்ய அகதிகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா இதனைத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டம், குடிவரவு, குடியகல்வு சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை கருத்திற் கொண்டே ரோஹிங்யர்கள் தற்போது முகாமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விடயத்தில் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமையவும், மனித நேயத்துடனும்தான் அரசு செயற்படுகின்றது.

எனவே, தற்போதைய அரசாங்கத்தை முஸ்லிம் விரோத அரசாங்கமாகக் காண்பிப்பதற்கு எவரேனும் முற்பட்டால் அதனை நிச்சயம் நாம் தோற்கடிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.(ச-22, 44)

**சுபிரி தன சம்பத** DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை | 0434 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| Y | 2 2 0 1 2 9 |

**Super Ball** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2700 | T | 16 30 55 59 |

**சனிதா** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| H | 18 44 66 67 | 4861 |

**SASIRI** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0607 | 22 44 48 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 04 14 42 62 | 4412 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| U | 14 | 31 53 72 74 | 1876 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 24.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| U | 07 24 38 47 | 2526 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய்த் தட்டுப்பாடு எதிரொலி

# தென்னைகளைத் தறிக்க இனி அனுமதி அவசியம்!

**கொழும்பு, ஜன. 25**

**நாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக தென்னை மரங்களை வெட்டுவதற்கு முன்னர் அனுமதி பெறவேண்டும் என தெங்கு அபிவிருத்திச்சபை புதிய கொள்கையை அறிவித்துள்ளது.**

இந்தத் தீர்மானம் ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் சபையின் ஆலோசகர் சமன் ஹேவகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தென்னை பயிரிடப்பட்ட நிலங்களை ஒரு ஏக்கருக்கு மேல் ஏலம் விடுவது அல்லது பிரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது . விவசாய நிலப்பயன்பாட்டுக்கான கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு ஏக்கருக்கு மேல் தென்னை பயிரிடப்பட்ட நிலங்கள் வேறு திட்டங்களுக்காக மீளப் பயன்படுத்தப்பட வேண்டுமானால், தென்னை அபிவிருத்திச்சபை, பிரதேச செயலகம் அல்லது தொடர்புடைய அரசாங்க அமைப்பில் அனுமதி பெறப்படவேண்டும்.

முன்னர் 10 ஏக்கருக்கும் குறைவான காணிகளை ஏலம் விடுவதற்கு காணி உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது தென்னை அபிவிருத்திச் சபையால் இந்த அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)




இப்ப எதையெதையெல்லாம் வீடியோ எடுக்கிறது, லைவ் போடுறது எண்டே எங்கட சனத்துக்கு தெரியாமல் இருக்குது. கலியாண வீட்டையும் லைவ்வில போடுகினம், செத்த வீட்டையும் லைவ்வில காட்டுகினம் எண்டு பார்த்தால் இப்ப ஆக்களோட சண்டை பிடிக்கிறதையும், கட்டிவைச்சு அடிக்கிறதையுமெல்லோ லைவ்விடத் தொடங்கிட்டினம். போனகிழமை ஒருத்தரின்ர உடுப்பைக் கழட்டி, கட்டி வைச்சு அடிச்சதை சிலர் வெளிநாட்டில இருக்கிறவைக்கு லைவ்வில காட்டினவை எண்டதைக் கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடி அவை வெளிநாட்டில இருக்கிறவைக்கு இந்தக் 'கட்டிவைச்சு' மொங்கினதை லைவ் விட்டதுக்குப் பின்னால ஒரு கதை இருக்குதாம்.

ஒரு பெடியனும், ஒரு பிள்ளையும் லவ் பண்ணியிருக்கினம். அந்தப் பிள்ளைக்கு வெளிநாட்டுக்குப் போக சான்ஸ் வந்திருக்குது. முதல்ல அந்தப் பிள்ளை போனால் தன்னையும் கூப்பிடும் எண்டிட்டு அந்தப் பெடியன் தன்னட்ட இருந்த காசெல்லாம் போட்டு அவாவை வெளிநாட்டுக்கு அனுப்பிவைச்சிருக்கிறான். ஆனால் அங்கபோன பிள்ளைக்கு வேற மாப்பிள்ளை பாத்து, கலியாணம் வரைக்கும் போட்டுது. அதால இந்தப் பெடியன்ர வீட்டில இருந்து ஒராள் நியாயம் கேக்க, அந்தப் பிள்ளை வீட்டுக்குப் போயிருக்கிறார். அப்பதான் அப்பிடி நியாயம் கேக்க வந்தவரின்ர உடுப்பைக் கழட்டி, கட்டிவைச்சு, வெளுவெளெண்டு வெளுத்திருக்கினம். அதை போன்ல லைவ் விட்டு, வெளிநாட்டில இருக்கிற அந்தப் பிள்ளைக்கும் தங்கட வீரத்தின்ர விறுத்தத்தைக் காட்டியிருக்கினம். இன்னும் கொஞ்சநேரம் அடிச்சிருந்தால், அந்தாள் செத்தேயிருக்கும். நல்லவேளையா அரைகுறை உயிரோட அவரை விட்டிட்டினம்.( இவ்வளவும் ஊர்க்காரச் சனம் சொன்னகதைதான் )

இனி விசயத்துக்கு வருவம். அந்தாளைக் கட்டிவைச்சு இம்மைமறுமையில்லாமல் அடிச்ச 20 பேரையும் பொலிஸ்காரர் தேடித்திரியினம். அதில ஒராள் முதலே பிடிபட்டுட்டார். மிச்சப்பேர் எங்கேயோ ஒளிச்சிட்டினம். ஆனால் இப்பிடிக் கட்டிவைச்சு அடிச்ச கும்பலுக்கும் பொலிஸ் மேல்மட்டத்துக்கும் நல்ல தொடர்பு இருக்காம். அதால ஒளிச்சிருக்கிற மிச்சப்பேரை தேடுறதை விடச்சொல்லி , மேல்மட்ட பொலிஸ்காரர் இந்தக் கும்பலைப் பிடிக்கிறதுக்குப் பொறுப்பா இருக்கிறவைக்கு சொல்லியிருக்கினம். அதோட இப்ப பிடிச்சுவைச்சிருக்கிறவையும் விடச் சொல்லியும் மேல்மட்டம் ஆய்க்கினை குடுக்குதாம். ஆனால் என்னதான் மேல்மட்டக்காரர் சொன்னாலும், இந்தச் சம்பவத்தில நியாயத்தின்ர பக்கம் தான் நிப்பம் எண்டும், ஒளிச்சிருக்கிறவையையும் பிடிச்சே தீருவம் எண்டும் , ஏற்கனவே பிடிச்சு வைச்சிருக்கிறவரையும் எக்காரணம் கொண்டும் விடமாட்டம் எண்டும் இந்தச் சம்பவம் தொடர்பா விசாரிக்கிற பொலிஸ்காரர் சொல்லியிருக்கினம். இப்பிடி மேல்மட்ட அழுத்தங்களுக்கு அடிபணியாத நல்ல பொலிஸ்காரரும் இருக்கிறதாலதான் கொஞ்சமெண்டாலும் குற்றங்கள் குறைவா இருக்குது. இல்லாட்டி நாடு சுடுகாடாப் போயிருக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

## பிறப்பு வீதம் சரிவு நாட்டுக்குப் பாதகம்

கொழும்பு, ஜன. 25

நாட்டில் பிறப்பு வீதம் குறைந்துவருவது எதிர்காலத் தொழிலாளர் துறைகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம்மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அதுகோரல தெரிவித்துள்ளார். 2023 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 247,900 ஆகக் குறைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## சீனாவில் பிரிவினை இலங்கை ஆதரிக்காது

விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 25

சீனாவுக்கு எதிரான எந்தவொரு பிரிவினையையும் இலங்கை நிராகரிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார் . தாய்வான் சீனாவின் மாநிலம்தான் என்பதில் இலங்கை உறுதியாக உள்ளது. தாய்வானின் சுதந்திரத்துக்கு எதிராக சீனா மேற்கொள்ளும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் இலங்கை ஆதரவளிக்கும் என்றும் விஜித ஹேரத் தெரிவித்தார். (ச-22,6)

## பழங்குடியினரின் உரிமை 3 மாதங்களில் சட்டவரைவு

கொழும்பு , ஜன 25


வேடர்களின் உரிமைகளை வரையறுக்கும் சட்டவரைவு மூன்று மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். பழங்குடியினருக்கும் பிரதமருக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஐ.நா சாசனத்தில் கூறப்பட்டுள்ள வேடர்களின் உரிமைகளை மையமாக வைத்தே இந்தச் சட்டம் இயற்றப்படும் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார். (ச-22, 6)

## புகைப்பிடித்தல் பெண்களிடையே உயர்வு

அண்மைக்காலமாகப் பெண்கள் மத்தியில் புகைத்தல் பயன்பாட்டு வீதம் அதிகரித்துள்ளதனால் அவர்களிடையே நுரையீரல் புற்றுநோய்ப் பாதிப்பு உயர்ந்துள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தற்போது ஆண்களின் மத்தியில் புகைத்தல் வீதம் குறைவடைந்துள்ளதாக ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (ச-இ)



## 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஜன. 25

வவுனியா - நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4ஆம் கட்டைப் பகுதியில் 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் ஒன்றை மடக்கிப்பிடித்து சந்தேகநபர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர்களைச் சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண்வாக்கு வாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்து மகிழ்ச்சி அடைவீர்கள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பண வரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச்சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** திடீர்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத் துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும்வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணை உங்கள் தேவையறிந்து பணஉதவி செய்வார். சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவிகேட்டு நச்சரிப்பார்கள். நீங்கள் கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்செலவுகளால் கடன்வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப் பிடித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.



# சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 25

புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையிலுள்ள தமிழர்களின் கலைத்திறன்களை வெளிக்கொண்டுவரும் முகமாக லண்டன் 'கலா ரசனா' அமைப்பின் ஏற்பாட்டில் சங்கமம் நிகழ்வு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

முதல் நாள், இந்தியாவிலிருந்து வருகைதந்த பிரபல திரை இசைப் பின்னணிப் பாடகரும் கர்நாடக இசைக் கலைஞருமான பாலக்காடு சிறீராமின் இசைக் கச்சேரி நடைபெற்றது. இரண்டாம் நாள் இரு நடன நிகழச்சிகள் நடைபெற்றன.

அமெரிக்காவிலிருந்து வருகைதந்த பரதநாட்டியக் கலைஞர் கலைமகள் சந்திரசேகரம் 'சங்கமும் சுனாமியும்' எனும் தொனிப்பொருளில் நடனத்தை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கொழும்பு தியாகராஜர் கலைக் கோவிலின் 'மனம் சுமந்த வலிகள்' நாட்டிய நாடகம் இடம்பெற்றது. (ச-25)

# கும்பாபிஷேகம்

கொடிகாமம் ஜன. 25

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்களில் தென்முக பர்வதவர்த்தனி அம்பாள் பஞ்சதள கோபுர பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. அதனையொட்டி எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை கர்மாரம்பம் இடம்பெறவுள்ளது. (ச-40-159)

# நெதர்லாந்து தூதரகத்தின் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன.25

நெதர்லாந்து தூதரகத்துடன் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து நடத்தும் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி நேற்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கண்காட்சி 27 ஆம் திகதி வரை காலை 10 மணி முதல், இரவு 7 மணி வரை இடம்பெறவுள்ளது.

புகைப்பட ஊடகவியலில் சர்வதேச விருதுகளை வென்ற புகைப்படங்கள் உட்பட, புகைப்படத்தினூடு கதை சொல்லும் பல புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதரகத்தின் பிரதித்தூதுவர் கலந்துகொண்டார். (ச-27)



# திருவள்ளுவர் மகாசபையின் மாநாடும், புத்தக வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜன. 25

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின், பவளவிழா மாநாடும், புத்தக வெளியீடும், புதிய நிர்வாகத்தெரிவும் சபையின் விழாக்குழுத்தலைவர் ச.சாம்பசிவத்தின் ஒழுங்கமைப்பில் கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வெகுவிமர்சையாக இடம்பெறவுள்ளன. சபையின் தலைவர் பொன். கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் ரா.சந்திரசேகர், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிழக்கு மாகாண ஆளுநர் ஜலந்தலால் ரத்னசேனா, யாழ். இந்தியத்துணைத்தூதுவர் சாய்முரளி, யாழ்.மாவட்டச்செயலர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

### கனடா விபத்தில்

# நீர்வேலியைச் சேர்ந்த தந்தை, மகள் பலி!

யாழ்ப்பாணம், ஜன.25

கனடாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் நீர்வேலியைச் சேர்ந்த தந்தை, மகள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் புஸ்பராசா பகீரதன் (வயது - 41) மற்றும் அவரது மகள் பகீரதன் ரியானா (வயது- 4) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். அதிவேக நெடுஞ்சாலையில் காரில் பயணித்துக்கொண்டிருந்தவேளை அவர்களது வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-28-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2025




































யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக் கண்காட்சி, 'பொருளாதார முன்னேற்றத்துக்கான வடக்கின் நுழைவாயில்' என்ற தொனிப் பொருளுடன் முற்றவெளியில் நேற்று ஆரம்பமாகியது. வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்புக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தால் பரிசீலிப்போம்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.25**

**புதிய அரசியலமைப்புத் தொடர்பான தமிழ்க்கட்சிகளின் கலந்துரையாட லுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங் கைத் தமிழரசுக் கட்சிக்கு உரிய முறையில் அழைப்பு விடுத்தால், அது தொடர்பில் பரிசீலிப்போம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; அண்மையில் நடந்த கட்சியின் மத் திய குழுக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் எதுவும் தீர்மானிக்கப்பட வில்லை. அரசியலமைப்பு வரைவு கலந்துரையாடல் மற்றும் கட்சிக ளோடு பேசுவதற்கு 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கஜேந்திரகுமார் அழைத்த கூட்டத்தில் பங்கேற்பது தொடர் பாக எதுவும் முடிவெடுக்கப்பட வில்லை.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவ ராக நான் இருந்தாலும் அந்தக் கூட்டம் தொடர்பான அறிவிப்போ, அழைப்போ எனக்குக் கிடைக்க வில்லை.

பொதுச் செயலாளருக்கும் கிடைத்த தாகத் தகவல் இல்லை. நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரனுடன் தான் இந்த விடயம் பேசப்பட்டுள் ளது. அவர் அது தொடர்பில் எம்மு டன் பேசியிருந்தார். கட்சிக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்கப்பட் டால் அதுதொடர்பாக நாம் பரிசீலிக் கலாம் - என்றார். (எ-20)

# உத்தரவாத விலையை நெல்லுக்கு நிர்ணயிக்குக

## பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 25

நெல்லுக்கு உத்தரவாத விலையையும், அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையையும் விரைவாக அறிவிக் கவேண்டும் என வட மாகாண ஆளுநருக்கு பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் பசுந்தேசம் அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

இலங்கையில் ஆண்டுதோறும் 40 இலட்சம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்படுகின் றது. ஆனால் 10 ஆயிரம் மெற்றிக்தொன் அள விலான நெல்லே அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் உத்தர வாத விலையில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யவேண்டும். அத்துடன் நெல் உலரவிடும் தளங்கள் இல்லாமையால் நெல்லில் இருக்கும் ஈரப்பதன் காரணமாக நெல்லுக்குரிய விலையைக் கொடுப்பதற்கு கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை. இதனால் விவசாயிகள் பிர தான வீதிகளில் நெல்லை உலரவிடுகின்றமை யால் போக்குவரத்து நெருக்கடி மற்றும் விபத்து கள் என்பனவும் ஏற்படுகின்றன. எனவே இத னைத் தவிர்ப்பதற்கு அறுவடைக் காலங்களில் நாவற்குழி உணவு களஞ்சியசாலை போன்ற இடங்களில் நெல் உலரவிடுவதற்கு விவசாயி களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் - என் றுள்ளது. (ச-25,28)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 25

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத் தின் "உரும்பையம்பதி பேய்ச்சி யம்மன் திருவந்தாதி" நூல் வெளியீட்டு விழா கொக்குவில் கிழக்கு தென்னாடு செந்தமிழ் சிவாகம மடத்தில், அடுத்தமா தம் 12 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. நூற்பிரதி ஒன்றின் விலை 200 ரூபா எனவும் ஆர்வலர்களைக் கலந்துகொண்டு நூலைப் பெற் றுக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் கேட்டுள்ளனர். (ச-25)

# கடையை உடைத்தெறிந்து உட்புகுந்த மோ.சைக்கிள்

## கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 25

முதியவர் ஒருவர் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் கடையொன்றுக் குள் புகுந்து கடையைச் சேதப்ப டுத்தி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் கல்வியங்காடு பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

லான்சர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவரின் மோட்டார் சைக்கிளே கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கம் சென்று வாக னங்கள் விற்பனை செய்யும் நிலை யத்தின் ஜன்னல் கதவை உடைத்து உள்ளே புகுந்துள்ளது. சம்பவத் தில் முதியவர் சிறுகாயங்களுக் குள்ளானதுடன் கடையியிலிருந்த பொருள்கள் சேதமடைந்துள்ளன. சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (ச-25-23)

# யாழ்.மாவட்டச் செயலகத்தில் எரிபொருள் பாவனைக்கு ரூ. 32,78,053 செலவு

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாவட்ட செயலகத்தின் மாவட்டச் செய லாளரின் கீழ் காணப்படுகின்ற வாகனங்க ளுக்கு கடந்த வருடம் எரிபொருளுக்காக 32 இலட்சத்து 78 ஆயிரத்து 53 ரூபா செலவ ழிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதன்படி கடந்த வருடம் நவம்பர் மாதம் வரை யிலான காலப்பகுதியில் அரச வாகனங்க ளுக்கு 139 .65 லீற்றர் பெற்றோலும் அதற் கான மொத்த செலவினம் 50 ஆயிரத்து 245 ரூபாவாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை டீசலுக்காக 9610.44 லீற்றரும் அதற்கான மொத்த செலவினமாக 32 இலட் சத்து 27 ஆயிரத்து 808 ரூபாவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-125)



# ரெலிகொம் வயர் மீது வீழ்ந்தது பனைமரம்

## அதிகாரிகள் நடவடிக்கையில்லை

யாழ்ப்பாணம் , ஜன. 25

வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பனைமரம் ஒன்று ரெலிகொம் வயர் மீது முறிந்து விழுந்து நீண்டநாள்களாகக் காணப்படும் நிலையில் அதனை அகற்றுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி கிராம அலுவ லர், ரெலிகொம் உத்தியோகத்தருக்குத் தெரியப் படுத்தியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்ப டவில்லை. வீழ்ந்துள்ள பனைமரத்தால் அதனரு கேயுள்ள மின்கம்பங்களும் சரிந்துவிழும் அபா யம் ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் விரைந்து பனைமரத்தை அகற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் குறிப் பிட்டனர். (ச-22-27)

# கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.25

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் இன்று சனிக்கிழமை தொடக் கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக் கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## வவுனியாவிலுள்ள

# கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணுவம் இணக்கம்

வவுனியா, ஜன. 25

15 வருடமாக இராணுவத்தின் வசமுள்ள வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணு வம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று தேசிய மக் கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கிளீன் சிறீலங்கா விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கூட்டுறவுப் பயிற்சி நிலையமானது கடந்த 15 வருடங்களாக இராணுவத்தின் பயன்பாட்டில் காணப்பட்டுவந்தது. கடந்தமாதம் இராணுவத்துடன் பேச்சு நடத்தினோம். அவர்கள் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் வடக்கு மாகாணசபை ஆட்சியின்போது வவுனியாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இதுவரை காலமும் திறக்கப்படாது பூட்டிய நிலையில் காணப்படுகின்றது.

எதிர்வரும் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆட் சியில் அதனைத் திறந்து மக்களது பயன்பாட்டுக்கு விடவுள்ளோம் - என்றார். (ச-22-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அறிவின்மை கேவலம். அதைவிடக் கேவலம் அதிக மனமின்மை.

– ஜேம்ஸ் ஆலன் –




# ஓயாது உரையாடும் கணக்குப்பிள்ளைகள்

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டு வெள்ள நிவாரண நிதியில் 6.1 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை பாய்ந்திருக்கின்றது. இந்த நடவடிக்கையில் தவறொன்றும் இல்லை. ஆனால், இது பாராட்டப்படக் கூடிய நடவடிக்கையா? என்று கேட்டால், 'இல்லை' என்பதுதான் பதில். ஏனெனில், பிடிக்க வேண்டிய பெரும் பெருச்சாளிகள் எந்தச் சலனமும் இல்லாமல் வெளியில் நடமாடிக் கொண்டிருக்கையில், அநுர தரப்பினர் தற்போது சிறுபூச்சிகளையே அடித்துக் கொண்டிருக்கின்றனர்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான பிணைமுறியுடன் தொடர்புடைய அர்ஜுன் மகேந்திரன் கைதுசெய்யப்பட்டு அவரிடமிருந்து அந்தத் தொகை மீட்கப்படும், ராஜபக்சாக்களால் வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணம் பறித்தெடுக்கப்படும், பொருளாதாரக் குற்றவாளிகள் பொறுப்புக்கூறச் செய்யப்படுவார்கள், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி நிலை நாட்டப்படும், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும், அரசியல்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்றெல்லாம் கூறியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிப் பீடம் ஏறினர். ஆனால், இதுவரை இந்தப் பெரிய திட்டங்களில் அல்லது நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நகர்வுகளில் அரசாங்கத்தால் வெற்றிபெற முடியவில்லை என்பதே அப்பட்டமான உண்மை. இப்போது அநுர அரசாங்கம் செய்துகொண்டிருப்பது 'அமைதிப்படுத்தும்' அல்லது 'பூசிமெழுகும்'நடவடிக்கைகளைத்தான். பெரமுனவினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் முன்னெடுக்கும் வழக்கமான அரசியல்தான் தேசிய மக்கள் சக்தியுடையதும் என்ற எண்ணப்பாடு மக்கள் மத்தியில் தோன்றிவிடக்கூடாது என்பதற்காக அவ்வப்போது மக்கள் சந்திப்புகளை நடத்துவதையும், ராஜபக்சக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்துவதையும், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பட்டவர்த்தனப்படுத்துவதிலும், மிகச்சிறிய கைதுகளை முன்னெடுத்து மக்களை அமைதிப்படுத்துவதிலும் அரசாங்கம் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றது.

மக்கள் கோரிய மாற்றம் என்பது இதுவல்ல. இந்த நடவடிக்கைகளைத்தான் தேசிய மக்கள் சக்தியால் முன்னெடுக்க முடியும் என்றால், அவர்கள் எதிர்க் கட்சியிலேயே இருந்திருக்கலாம். அதிகாரம் வழங்கப்படுவது 'செயற்பாட்டு' அரசியலுக்காகத்தான். 'கணக்குப்பிள்ளை கதைக்கக்கூடாது: கணக்குத்தான் கதைக்கவேண்டும்' என்றொரு சொலவடை தமிழில் வழக்கில் உள்ளது. இது யாருக்குப் பொருந்துகின்றதோ அநுர என்ற கணக்குப் பிள்ளைக்குக் கச்சிதப் பொருத்தம். எதிர்க்கட்சியில் இருந்தபோதும், இடைக் கால அரசாங்கத்தை அமைத்த போதும், தனிப்பெரும் பான்மையுடன் ஆட்சியமைத்த போதும் கணக்குப் பிள்ளை கதைத்துக்கொண்டே இருக்கின்றாரே தவிர, செயற்பாட்டு அரசியல் என்பது இல்லவேயில்லை. தாய்வான் சீனாவின் இணைந்த பகுதியென்று, 'சர்வதேச அரசியல்ப் புரிதல்' இல்லாமல் சிறுபிள்ளைத்தனமாக அறிவிப்பதும், இந்தியாவுக்கு உட்குத்து குத்துவதும், சீனாவின் செல்லப்பிள்ளையாக மாறுவதும் செயற்பாட்டு அரசியல் அல்ல. அதுதான் செயற்பாட்டு அரசியல் என்றால், அதைச் செய்வதற்கு அநுரதான் வரவேண்டும் என்றில்லை, ராஜபக்சக்களே போதும்!

# ஓகஸ்ட்டின் பின்னர் கடவுச்சீட்டுக்குத் தீர்வு



## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

**கொழும்பு, ஜன.25**

**நிபுணர்கள் குழுவின் பரிந்துரையுடன் 5 இலட்சம் கடவுச்சீட்டுகளை கேள்விகோரல் முறையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் கடவுச் சீட்டுகளை வழமை போன்று பெற்றுக்கொள்வதற்கான நிலையை உருவாக்கமுடியும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் கடவுச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைப் பெறுவற்கு இணைய வழி மூலமாக திகதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எவருக்காவது கடவுச்சீட்டுக்கான அவசர தேவை காணப்படுமாயின் அதற்காக விசேட கரும பீடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் ஒரு நாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும். இணையவழி மூலமாக தினத்தை ஒதுக்கிக் கொண்டுள்ளவர்களுக்காக ஒரு நாளில் 800 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. அவசர தேவைகளுக்காக கடவுச்சீட்டை எதிர்பார்ப்பவர்களுக்காக ஒரு நாளில் 650 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன- என்றார். (எ-இ)

# இலாபமீட்டும் புகையிலை நிறுவனம்

கொழும்பு. ஜன. 21

புகையிலை நிறுவனத்தின் இலாபம் சுமார் 400 வீதம் அதிகரித்துள்ளதாக அதன் நிர்வாக பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்துள்ளார். முறையற்ற வரி நிர்ணயம் காரணமாக கடந்த 5 வருடங்களில் நாடு சுமார் 100 பில்லியன் ரூபாகலால் வருவாயை இழக்கப்பட்டது.

இந்த வரித் தொகையை நிர்ணயிப்பதன் மூலம் சிகரெட் விற்பனை சுமார் 50வீதம் குறைந்திருந்தாலும் கூட புகையிலை நிறுவனத்தின் இலாபம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ஓமானில் பணிபுரிய தொழில் விசா கட்டாயம்

கொழும்பு, ஜன. 25

ஓமானுக்கு வேலைக்குச் செல்பவர்கள் தொழில் விசாவை பெற்று செல்லுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. 2023 ஒக்ரோபர் தொடக்கம் சுற்றுலா விசாவில் ஓமானுக்குச் சென்று தொழில் செய்வதற்கு ஓமான் பொலிஸ் தடைசெய்துள்ளது. எனவே சுற்றுலாவிசாவில் சென்று ஓமானில் தங்கியுள்ளோர் தமது விசா காலாவதியாக முன்னர் நாடு திரும்புமாறும், தண்டப்பணம் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-22,6)



# ப.மிளகாய் விலையுயர்வு

கொழும்பு, ஜன. 25

வரலாறு காணாத அளவுக்குப் பச்சை மிளகாயின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர். அதன்படி, ஒரு கிலோ பச்சை மிளகாய் 1800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# முறையீடுகளை சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஜன. 25

2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மேன்முறையீடுகளை இணைய வழி ஊடாக சமர்ப்பிக்கலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரை இதற்கான காலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ச-இ)



நாளை
ஞாயிற்றுக்கிழமை - தை - 13
26.01.2025
சுபநேரம் : 09.36 - 11.06
ராகுகாலம் : 05.06 - 06.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பட்டு மகிழ்வோம்

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் க. இளங்கோவன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன்லெரிவ் லியன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-22-159)


## Vacancy for Audiology Technician

Government general Hospital Welfare Society of Teaching Hospital, Jaffna invites applications from suitably qualified individuals to fill the vacancy of Audiology Technician at Teaching Hospital, Jaffna.

Send your applications to the office of the Government General Hospital Welfare Society, Teaching Hospital, Hospital road, Jaffna before 16th Feb 2025.

(CS/57309) J-1


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி சிவலோசனி சுரேந்திரன்**

அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் பசுபதியம்மா சிவசுப்பிரமணியம்**

அவர்கள் நேற்று 24.01.2025 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் குடும்பத்தாரின் துயரிலும் பங்குபற்றுகின்றோம்

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

CS/29701) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 03 . 1932



மறைவு 16 . 01 . 2025

### பரமேஸ்வரி கந்தமூர்த்தி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், லண்டனை (London) வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி கந்தமூர்த்தி அவர்கள் கடந்த 16.01.2025 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் கந்தமூர்த்தி (Former family counsellor and former jaffna scout district commissioner Srilanka) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் அரசகுலசிங்கம் அவர்களின் அருமைச் சகோதரியும், கலாமதி (U.K), கலாரவி (UK), கலாறெஜி (நோர்வே), கலாரமணி (UK), கலாவண்ணன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன் (UK), ஜெயந்தி (UK), ஶ்ரீயாணி (Norway), செல்வக்குமார் (UK), கோகிலா (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விக்டோரியா - Hans (Norway), கிறிஸ்றினா (Norway), Dr.மயூரி (UK), யாழினி (UK), கோபி (UK), தருணி (UK), அரண் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், Ada (Norway), Jacob (Norway) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை Imperial Sports Ground Bishopsford Rd, Morden SM4 6BF, United Kingdam ல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Morden Cemetery London SM4 4Nu United Kingdom எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
கலாமதி - (மகள்) - 079 6721 6583
கலாரவி - (மகன்) - 079 4642 3279
கலாறெஜி - (மகன்) - 073 0628 1062
கலாரமணி - (மகள்) - 074 2305 0307
கலாவண்ணன் - (மகன்) - 079 5684 5225

தகவல்: குடும்பத்தினர்.

(CS/57300) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 07 . 1941



மறைவு 24 . 01 . 2025

### மாணிக்கராஜா பவளேஸ்வரி

25, பிறவுன் வீதி, முதலாம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கராஜா பவளேஸ்வரி அவர்கள் நேற்று (24.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு இரத்தினம் மாணிக்கராஜா அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தி, பிரியந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சர்வேஸ்வரன் (அப்பன்) மற்றும் வரதலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனீஷ்-தர்சினி (London), நிஷானிக்கா (ஆசிரியர் கிளி/ அன்னை சாரதாதேவி வித்தியாலயம்), நிகேயன், தட்ஷாயினி-பிரசாத் (Style Mobiles), மதுஷன்-சிந்துனி (PMF Finance) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரித்விகா, ஜான்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி நடராஜா, பராசக்தி துரையப்பா மற்றும் சுப்பிரமணியம் சிவம் சீதாலட்சுமி (Swiss), நகுலேஸ்வரி தனபாலன், மங்களேஸ்வரி கணேசமூர்த்தி (Swiss) விமலநாதன் சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இரத்தினம் நடராசா மற்றும் இரத்தினம் சண்முகராஜா ஆகியோரின் பாசமிகு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2025) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பிறவுன் வீதி நீராவியடியில் உள்ள அவரது "பொன்" இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

25, பிறவுன் வீதி,
1ம் ஒழுங்கை, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
ச. மதுஷன்- 077 281 4552,
சி. பிரசாத்-077 559 4179

(CS 29702) P-1

## மரண அறிவித்தல்

விராட் விஸ்வபிரம்மனே நமஹ

தோற்றம் 02 . 08 . 1939



மறைவு 24 . 01 . 2025

### திருமதி காளிதாஸ் யோகம்மா (றம்பா)

இல 7, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காளிதாஸ் யோகம்மா அவர்கள் நேற்று (24.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-கண்மணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்துவேல்-அவ்வைஅம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துவேல் காளிதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இந்திராணி கந்தசாமியின் சகோதரியும் உதயகுமாரி (ஓய்வு நிலை குடும்பநல உத்தியோகத்தர்-சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), குகதாஸ் (பிரான்ஸ்), சந்திரகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயகாந்தன், சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாயீஜன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆளுநர் செயலகம்-வடமாகாணம்), காலஞ்சென்றவர்களான ஜனனி, வாமனா மற்றும் நிதுசன், மிதுனா, யஸ்மினா, பூர்ணிமா (ஆசிரியர், கிளி/ முருகானந்தாக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் அவிக்னா, சுவஸ்ரிக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 647 0391

(CS 29707) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வாக்குறுதிக்கேற்ப நீக்குங்கள்

## வலியுறுத்துகின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.

**கொழும்பு, ஜன.25**

**தெற்கில் உள்ளவர்கள் நினைவேந்தலை பயங்கரவாதம் என்கின்றனர். இது நெறிமுறையை மீறுவதாகும். அரசாங்கத்துக்கு ஏற்றால் போல் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தமுடியாது. தேர்தல்காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளப்பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பிலும் கூறவேண்டியுள்ளது. நெறிமுறை என்ற சொல்லை பயன்படுத்துகின்றீர்கள். ஆனால் நீங்கள் செய்வதை பொறுத்தே அர்த்தம் கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக முக்கியமானது. தேர்தலின் போதும், அதற்கு முன்னரும் இந்தச் சட்டம் நீக்கப்படும் என்று குறிப்பிட்டனர். இப்போது காலம் தேவையென்று கூறுகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தவறுகள் இடம்பெற்றுள்ளன. அதை மீளப்பெறுவதாகக் கூறினாலும் பொலிஸார் இதனை எப்போதும் தவறாகவே பயன்படுத்துகின்றனர். அரசாங்கம் மாற்றத்தைச் செய்யவேண்டுமென்றால் ஒரு வருடத்தில் அதனைச் செய்ய வேண்டும்.

அதைப் பின்னர் செய்யமுடியாது. கால தாமதம் செய்தால் பின்னர் நெருக்கடிகளை ஏற்படுத்தும். அதேவேளை, அரசியல்கைதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# கட்டாக்காலி மாடுகளாலும் விவசாயம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

வலி.மேற்கில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளதால் விவசாய நிலங்களுக்குள் அவை புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன என்று பிரதேச விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச விவசாயக் குழுகூட்டம் அண்மையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது அவர்கள் இதனைக் குறிப்பிட்டார்.

மூளாய் தெற்கு, பொன்னாலை ,கல்விழான் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் அழிவடைகின்றன. கால்நடைகளை வளர்ப்போர் இரவுவேளைகளில் வேண்டுமென்றே மேய்ச்சலுக்காக வயல் நிலங்களுக்குள் அனுப்புவதனையும் அவதானிக்கமுடிகிறது. இது தொடர்பில் விவசாய சம்மேளனங்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-22,125)

# மருந்து விலைக்கு கட்டுப்பாடு பொறிமுறை

வவுனியா, ஜன. 25

மருந்துகளின் விலையைக் குறைக்க புதிய விலைக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

புதிய முறையின் கீழ் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்தை விற்பனை செய்யக்கூடிய அதிக பட்ச விலை வரம்புகள் வர்த்தமானியில் வெளியிடப்படும். மருந்து விலைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்துக்கு மாற்றுவதற்கான விதிமுறைகள் இயற்றப்படும். புதிய விதிமுறைகள் விதிக்கப்படுவதால், மருந்துகளின் விலைகள் துறைமுகத்திலேயே நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் கலைவிழா அண்மையில் இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் த.முகுந்தன் பங்கேற்றார். (ச)




# அதிர்ஷ்டம் அடித்ததாக வந்த கைபேசி அழைப்பால் பறந்தது 2 இலட்சம் ரூபா!

யாழ்ப்பாணம், ஜன.25

"உங்களுக்கு ஐந்து லட்சம் ரூபா அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது" எனத் தெரிவித்து வந்த கைபேசி அழைப்பால் யாழ்ப்பாணம் ஏழாலை கிழக்கைச் சேர்ந்த வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் 2 இலட்சம் ரூபா பணத்தை பறிகொடுத்துள்ள சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த நபரின் தொலைபேசி இலக்கத்துக்கு உங்களுக்கு ஐந்து லட்சம் ரூபா மெகா அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. மெகா அதிர்ஷ்டத்துக்கான காலக்கெடு முடிவடையவுள்ளது எனத் தெரிவித்து உங்கள் வங்கி இலக்கத்தைக் கூறுமாறு கோரவே குறித்த வர்த்தகரும் தனது வங்கி இலக்கத்தைக் கூறி ட் ர்.

அதன் பின்னர் உங்களுக்கு மெசேஜ்ஜில் ஆறு இலக்கங்களைக் கொண்ட ஒரு மெசேஜ் வரும். அதனைத் தம்மிடம் கூறுமாறும் வினவவே குறித்த வர்த்தகர் அதனையும் கூறியுள்ளார். அதனையடுத்து அவரின் வங்கிக் கணக்கிலிருந்து சடுதியாகப் பணத்தொகை குறைவடைந்து சென்றதையடுத்து பதறியடித்து வங்கிக்குச் சென்று தனது சேமிப்புக் கணக்கின் செயற்பாடுகளைத் தற்காலிகமாக முடக்கியுள்ளார். இதனால், அவரது எஞ்சிய பெரும்தொகைப் பணம் மோசடியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-66)



# வெட்கம் இருந்தால் தாமாக வீட்டிலிருந்து வெளியேறுவர்

*முன்னாள் ஜனாதிபதிகளை சாடும் நளிந்த*

கொழும்பு, ஜன.25

முன்னாள் ஜனாதிபதிகளை அரச இல்லங்களை விட்டு வெளியேறவேண்டும் என்று பிரத்தியேகமாகக் குறிப்பிடத் தேவையில்லை. வெட்கம் என்பது இருக்குமாயின் அவர்களாகவே வெளியேறவேண்டும். பெற்றோரை அவர்களது பிள்ளைகளே பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தச் சுமையை நாட்டு மக்கள் மீது சுமத்தக்கூடாது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் வீடுகளைப் பராமரிப்பதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்கும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வசிக்கும் வீட்டுக்குப் பெருமளவிலான நிதி செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு 33 இலட்சம் ரூபா, 2022ஆம் ஆண்டு 3 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா, 2023 ஆம் ஆண்டு 18 மில்லியன் ரூபா, 2024 ஆம் ஆண்டு 9 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வீடுகளில் இருப்பவர்களுக்கும் வெட்கமில்லை, அவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் பெறுபேறு

# முல்லைத்தீவு மாணவன் மாகாணத்தில் முதலிடம்



முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையின் மாணவன் கிசோதரன் அக்ஷயன் வெளியாகியுள்ள புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் 186 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று பெருமைசேர்த்துள்ளார்.

அதேவேளை குறித்த பாடசாலையில், சு.அக்ஷயா166, வ.ராகவன்-165, சு.சுபவீன்-165, பி.ஸ்ரீஸ்னியா-161, ப.யோஸ்வென்155, ஜெ. ஜஸ்மிதா -154, த.துபிசனா-151, க.டனுசிகா-150, ஜெ.டிஸ்மியா-150, சு.அபிஷாலினி-147, க.கபிர்சிகா144, த.தபிசனா-141, யோ.லோசனா-139 ஆகியோர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ச-41-113)

புலமைப்பரிசில் பெறுபேறு

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை யாழ்.மாவட்டத்தில் முதலிடம்





யாழ்ப்பாணம், ஜன.25

2024 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். பரமேஸ்வரன் பிரசோதன் என்ற மாணவன் 186 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.

அதேவேளை யாழ். ஜோன் பொஸ்கோ மாணவன் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ச)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**
சு.எபினா-157, ர.கெத்ஷியா-150, தி.மதுஸ்கா-142, ச.சஜனி-140

**போக்கட்டி அ.த.க. பாடசாலை**
ச.கபிசிகா-170, நா.கரிஷ்- 140

**இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்**
அ.அபிதரன்-169,சி.பிருஷா-148, க.கபிலாஸ்-141

**எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்**
கோ.கவிஷன்-160,அ.லீவிஷா -150,

**இயற்றாலை அ.மி.த.க பாடசாலை**
சி.ரனுசிகா-141

**கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை**
ம.சங்கீத்-140, ச.துளசிகன்-144, செ.விதுசா-152, ம.சுபிஸ்ரிகா-159, ற.காவியா-165, ஸ்ரீ.றீத்திகா-144, க.கபினயன்-156, ச.சானுஜன்-151, வி.விதுசா-141, து.விஸ்மிகா-144, ர.டஷ்மிகா-154, ர.அக்ஷயா-152

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**
சிவானந்தன் விஷ்வா-154, ஜெயந்தன் தன்சிகா-139

**பளை வேம்பொடுகேணி சீ. சீ. த.க.பாடசாலை**
ஆர்.ஷயனுகா-161, ஜீ.அனஸ்கர்-157, ஆர். வருண்ஜன்-154 ,ஆர். அனுஷயன்-151 , ரீ. கேனுஜா-142

**ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்**
த.அனுசன்-170 ,ஜெ.ஜெஸ்மி-152 ,வி.நிதுஷா-151 , அ.ஆராதனா-143

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**
த.பவினா-166, ச.லுக்ஷிகா-151, வ.கரன்ஜா-150, க.கிஷோபன் -150, சி.பவிஷியா-147, சி. விஷ்ணுகா-145

**கிளிநொச்சி பேராலை சி.சி.த.க. பாடசாலை**
து. டிசாந் -142

**நாவற்குழி மகா வித்தியாலயம்**
மோ.சஷாங்கன்-166, சு.கர்ணிகா-165, நி.குமார்ரித்திகா-152, ப. வர்ணிகன்-148

**தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை**
ச.சர்விகா-150, அ.கேதாரணி-141, ற.லம்போபரன்-134, சு.மோகனகீதன்-129, சி.கேசிகன்-123, சா.பிறேநுஜா-110

**மூளாய் அ.மி.த.க பாடசாலை**
யசிந்தன் நிறோயினி-156

**யா/தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை**
சதீர்சன் அபிநயா-148.

**மூளாய் சைவப்பிரகாசா வித்தியாலயம்**
மு.சுமேதன்-167, ஜெ.நிஸ்விதா-158, கு.தனுசன்-156, ச.சயந்திகா-153, வ.ஆர்த்திகன்-143, பா.அஸ்வினியா-141

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**
பரமேஸ்வரன் பிரசோதன்-186, கண்ணதாசன் சிவதாராணி-180, பிரசாந்தன் அருணியன்-178 , சந்திரமோகன் ஹிருஷிஹான்-175 , சுதாகரபாஸ்கர் தட்சரா-175, சஞ்சீவ்காந்த் பிரனீஷ்-175, குமரன் அதிரா-175, சரவணபவ சிவசரணிகை-175, நிதர்சன் அக்ஷனா-173, தர்மேந்திர யானுகேஷ்-173, நவநீதன் சாகித்தியன்-172, சுரேந்திரன் நதீஷ்ஷன்-172, உதயராஜ் அட்ஷரன்-170, செல்வகுமார் பிரித்திகா -169, ஸ்ரீநியாகரன் கிருஷிகா-168, சுரேஷ்குமார் கவியா-168, பாலகோபி ஆதேஷ்-167, சர்வராஜா அட்சயன்-166, சத்தியரூபன் லைனிசாய்-166, உமாநாத் ஷியானா-166, ஸ்ரீதரன் ஹர்ஷிகா-166, உதயணன் சாய்கார்த்திகன்-166, சபேசன் அக்ஷயன்-166, ஜீலியம் மரினாத் பெனிக்ஸ்சன்-164, கண்டீபன் லட்சயா-164, முரளீஸ்வரபவன் நிஷாலி-164, சுதாகரன் சாதுர்யா-164, திசோகரன் ஹனுக்ஷா-163, சிவநேசன் அஜீஷ்-163, விஜயதாஸ் மதுரகன் -163, ராஜேஷ்கண்ணா விதுலாஷ்-162, பிரகலாதன் கவேனாயா-162, திருக்குமரன் திஷாந்த்-162, சசிகரன் சகிஸ்வின் -162, சரவணன் திஷ்வாக்-162, துஷ்ஜந்தன் அர்ஜுன்-161, பாலகைலாசநாதசர்மா மகேஸ்வரநாதசர்மா -160, நந்தகுமார் நிஜந்தன்-160, நந்தகுமார் அனுஜித்-160, மகேந்திரன் கேசரன்-160, மணிவண்ணன் பிரஷ்ணவே-160, செல்வஹரன் ஹரீனி-159, ரமணகுமார் ஆராதனி-159, ககேந்திரா ஷெரின்பெனிக்டா-159, பிரேமகாந்த் யுககாந்த்-159, ஜீவதர்ஷன் ராஹல்வியா-158, ஜீவபிரதாப் நிருஷி-158, முரளீஸ்வரபவன் நதீஷ்-158, தனோஸ்குமார் கபீர்னா-157, சிசிந்தன் அர்ச்சாயா-157, சுதர்சன் அஷைன்-157, ஜெயக்குமார் லயக்சயா-157, ரூபாக்ராஜ் கீர்த்தனா-157, அஹிலன் ஆதவ் 156, சயந்தன் தர்மிகன்-156, கமலநாதன் தக்ஷன்-156, சத்தியநாராயணன்-அஸ்வினி-156, அஜந்தன் அஸ்விதா-156, சிவஞானம் கவிதன்-155 , சுரேஸ் ஜுகர்தன்-155, சுதர்சன் பவதாரணி-155, யசோதன் தக்ஷிகா-155, விக்னேஸ்வர சஞ்சனா-155, ஸ்ரீநிமல் டானியா-154, அரியநந்தம் அனிகா-154, யசோதரன் கவேஷா-154, அபராஜ் பிரணேஷ்காந்த்-154, விஜயரூபன் பிருந்தபன்-154, சுரேஷ் தர்மிகா-154, மணிகண்டன் ஜருஷா-154, அருள்நேசன் சாயார்ச்சாயன்-154, மயூரநாதன் கபில்ஸ்-153, கோகுலன் கவிஷ்ணன்-153, கேதீஸ்வரன் ஷரன்-153, நந்தகுமார் கஜதர்ஷி-153, உல்லாசனன் தரநேகா-152, ஜெயராசா பானுஷா-152, ரவிச்சந்திரன் சஜீவ்-152, திருமால் திஷிகேசிகன்-151, வஜீந்திரன் ஹர்னிஷா-151, மதன் அர்த்தனன்-150, பிரியதர்சன் மிருணாலினி-150, கோஹெலதாஸ் ஜானுகா-150, திவஹர் நிஸ்மிதன்-150, எட்டயபவன் சௌமியன்-150, செந்தூரன் சரண்-150, வசிகரன் திவானுஜன்-149, கேசவன் இலக்கியன்-149, சிவரஞ்சன் ஹரிஷணன்-149 ,திருக்குமார் விஷ்ணுஜன்-148, பரணீஹரன் மாதுர்யா-148, ஜெயகணேஷ் கிருத்திகேசன்-148, கோகுலன் ஹரித்துவரன்-147, கேதீசன் வர்ஷாயினி-147, ராசலிங்கம் நிலாக்ஷி-147, அனந்த் யஸ்வின்யா-147, அனந்தகோபன் அனுஸ்ரி-147, கலையழகன் அபிஷாலினி-147, யோகேஸ்வரநாதன் சுரபிஹா-147, நிசாகரன் கவிநயா- 146,கஜேந்திரன் சர்வின்-146,கோகுலராம் கவிஷா-146, ரமணபிரகாஷ் தஷ்வின்-145, கமலக்கந்தன் சாருஜன்-145, பிரசாத் விபிஷா-145, பகீரதன் யாஷானா-145, செல்வசுதந்திரன் பிரதிக்ஷா-145, பஹீரதன் சாயிஷரன்-145, சதீஷ்குமார் ஹரிஷணன்-145, பகீரதன் தரிக்கன்-145, வெங்கடேஷ் அபூர்வா-145, செந்தூரன் அட்சயா-144, அகிதரன் ஷர்மிகா-144, செல்வவேல் மயூரன்-143, பிரியந்தன் அபிசயன் 143, கமலாதாஸ் கியோனா-143, சுரேஸ் ஜாதர்தன்-142, முகமதுநாசர் பாத்திமா அனுசா-142, கலிஸ்தான் தபிக்னா-142, ஜெயரதன் துளசிகன்-142, பிறதீபன் சாகித்திய-142, செந்தூரன் அபிநயா -142, சுகுமாரன் அஷ்மிதா-142, ஜனார்த்தனன் அதுஜான்-141, நவநீதன் அருஜனன்-141, கஜவதனன் தினுஜன்-141, சிவரூபன் ரம்மேசன்-141, சிவரூபன் அக்ஷயா-140, அகிலன் திஷ்வின்-140, பிரபாஹரன் தெர்ச்சிகன்-140, ஜெயகிஷன் அபிநயன்-140, விஸ்வகரன் பிரணேத்தன்-140, உதயகுமார் பாவராஞ்சா-140,ஸ்ரீதரன் அரணன்-139 (ச-125-9-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பொஸ்கோ வித்தி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்.மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதத்தில் யாழ். புனித ஜோன் பொஸ்கோ முதலிடம் பெற்றுள்ளது.
அதன்படி பரீட்சைக்குத் தோற்றிய 216 மாணவர்களில் 135 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்ற மாணவர்களின் சதவீதம் 63 வீதமாக பதிவாகியுள்ளது.
215 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். (ச125)

# 66 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் வவு.தமிழ் ம.ம.வித்தியில் சித்தி

வவுனியா, ஜன.25
2024ஆம் ஆண்டுக்கானதரம்ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் 66 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குமேல்பெற்றுசித்தியடைந்துள்ளனர் அவர்களில் கிருபானந்தன் திகாஷ் மற்றும் சாத் விகா ஞானசூரியன் ஆகியோர் 180 புள்ளிகளை பெற்று பாடசாலை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (ச-110)

புலமைப்பரிசில் பரீட்சையில்

# தென்மராட்சி வலயத்தில் 19.2 வீதமானோர் சித்தி

யாழ்ப்பாணம், ஜன. 25
தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைக ளில் 2024ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 792 மாணவர்களில் 152 மாணவர்கள் (19.2 வீதமானோர்) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் 666 மாணவர்கள் (84.1வீதமா னோர்) சித்திபெற்றுள்ளனர்.
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் 42 பேரும் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் 81 20 பேரும், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் 12பேரும், மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயத்தில் 7பேரும், கல்வயல் ஸ்ரீ சன்முகா நந்தா வித்தியாலையத்தில் 5 பேரும், சாவகச்சேரி மகளீர் கல்லூரியில் 5 பேரும், டிறிபேர்க் கல்லூரியில் 4 பேரும் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந் துள்ளனர். (ச-28)



மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய

# காற்றின் தரம் ஆராய்வுப்பணி யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 25

**கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாக யாழ். மாவட்டத்தின் காற்றின் தரத்தை ஆராயும் பணிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.**

யாழ்ப்பாணத்தின் வளிமாசு தொடர் பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரம் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் தேசிய கட்ட டங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற் றும் மத்திய சுற்றாடல் அதிகாரச பைக்கு யாழ். மாவட்டத்தின் வளி யின் தரத்தைக் கணித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடந்த வருட இறு தியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டி ருந்தது.
இதனடிப்படையில் யாழ்ப்பாணத் தில் ஏற்கனவே இருந்த மூன்று வளித்தர கண்காணிப்பு நிலையங் களுக்கு மேலாக புதிதாக மூன்று வளித்தர கண்காணிப்பு நிலையங் கள் கடந்த 2024 டிசெம்பர் மாதம் நிறுவப்பட்டிருந்தன.
கடந்த மாதம் அவதானிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதியே வளிமாசு அதிகளவில் பதிவு செய்யப்பட்டிருந் தது.தொடர்ந்து அது குறைவடைந்து வருவதாக கடந்த ஜனவரி 2 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபை உதயனுக்கு தெரிவித்திருந் தது.
இந்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் ஒரு மாதம் வரையில் சோதனை நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இதற்கென மேலதிகமாக 13 வளித் தர நிலையங்கள் யாழ்.மாவட்டத் தில் அமைக்கப்படவுள்ளது. அதன் பிரகாரம் சாவகச்சேரி வலய கல்வி அலுவலகம் , மருதங்கேணி பிர தேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை உப அலுவலகம் ,கரவெட்டி ,வலிகிழக்கு பிரதேச சபை உப அலுவல கம்,அராலி பிரதேச சபை உப அலு வலகம்,வேலணை பிரதேச சபை மற்றும் பழைய பூங்கா யாழ்ப்பா ணம் காரைநகர் பிரதேச சபை ஆகிய 9 இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன.
இதேவேளை மேலும் நான்கு இடங் களில் இன்று சனிக்கிழமை அமைக் கப்படவுள்ளது. மேலும் பழைய தபால் நிலைய வளாகத்திலும் நட மாடும் வளித்தர நிர்ணய நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது..
மத்திய சுற்றாடல் அதிகார சபை மற் றும் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணியாளர்கள் அதி காரிகள் 8 பேர் இதற்காக விசேட மாக பணிகளை முன்னெடுத்துள்ள னர். வளிமாசு தொடர்பில் ஒரு மாத கால அறிக்கை பெறப்பட்டு எதிர்வ ரும் பெப்ரவரி மாதம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள் ளது என்றும் தெரிவிக்கப்படு கின்றது. (ச-125)

# மகளிர் தினத்தையொட்டி விளையாட்டுப்போட்டிகள்

சாவகச்சேரி, ஜன.25
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தினரால் பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு சங்க அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் பிள்ளை களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவில் முன் றலில் எதிர்வரும் 2 ஆம் திகதி பி.ப.1 மணிக்கு நடத் தப்படவுள்ளது.
போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் சங்க செயற்குழு உறுப்பினர் திருமதி கே. ஜெயசி றியிடம் தமது பெயர்களையும் பங்குபற்றும் விளை யாட்டுகளின் விவரங்களையும் பதிவு செய்யுமாறு சங்க செயலாளர் திருமதி து. தர்சிகா அறிவித்துள் ளார். (ச-25, 9)

வவுனியாவில்

# 80 வீத உளுந்துச்செய்கை முழுமையாக அழிவு

வவுனியா, ஜன. 25
வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து பெரும் மழையின் காரணமாக 80 வீதமான உளுந்துச் செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.
இம்முறை 13 ஆயிரத்து 961 ஏக்கர் உழுந்து செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11 ஆயிரத்து 231 ஏக்கர் முழுமையாக அழிவடைந்துள்ளது.
அறுவடை காலம் நெருங்கி இருந்த சமயத்தில் பெய்த மழையால் உளுந்து முளைக்கட்டியுள்ளது. இதன் காரணமாக உளுந்தை அறுவடை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பயிரழிவுக்கான நஷ்டஈட்டை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,110)



# ஆடம்பரக் கற்றல் உபகரணங்கள் உட்புகுவதாக மாணவர்கள் பாதிப்பு

உடற்கல்வி ஆசிரிய சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
இலவசக் கல்வியைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் பாடசாலைக்குள், ஆடம்ப ரக் கற்றல் உபகரணங்கள் நுழைவதால் மாணவர்களின் கல்விச் சமத்துவம் பாதிப்புக்குள்ளாகும் என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பாடசாலைகளில் இலவசக்கல்வி நடைமுறையில் இருக்கின்றபோதும் மாணவர் களின் சமத்துவத்தைச் சீரழிக்கும் வகையில் ஆடம்பர கற்றல் உபகரணங்கள் பாடசாலைக்குள் நுழைகின்றன. இது பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் மாணவர்களை மனரீதியில் பாதிப்புடன் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகவும் வழிவகுக்கின்றது -என்றார். (ச-25, 122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

15th EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

## JAFFNA INTERNATIONAL TRADE FAIR

**JITF 2025**

**24 25 26 JANUARY ஜனவரி**

10.30மு.ப - 8.30பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

www.jitf.lk




















PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN, NIPPON CEMENT

SILVER SPONSORS: FINE, Hayleys Solar, Vivo, Maxies, MAK LUBRICANTS, EVOLUTION, PHOENIX, Solo

OFFICIAL SPONSORS: PRINT & ONLINE MEDIA, TELEVISION, HOTEL, PA SYSTEMS

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

IN ASSOCIATION WITH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நூறு மலர்கள் மலரட்டும்’ 2 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

தேசியகலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ‘நூறு மலர்கள் மலரட்டும்’ என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இது நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில், அமரர் குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவரங்கில் இடம்பெறவுள்ளது. இதில் ‘ஈழத்து நூல்களை அறிவோம்’ எனும் தொனிப்பொருளிலான புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மௌ.சித்திரலேகாவின் ‘பெண்நிலைச் சிந்தனைகள்’ கட்டுரைத்தொகுப்புத் தொடர்பாக சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. யாழினியும், சாகித்திய மண்டல முதற் பரிசினைப் பெற்றுக்கொண்ட மைதிலி றெஜினோல்டின் ‘ஓட்டிச உலகில் நானும்...’ என்ற வரலாற்று நூல் பற்றி இளம் எழுத்தாளர் மாதவி உமாசுதசர்மாவும், மாயனின் ‘நூறு மின்னல்கள்’ நாவல் தொடர்பாக வவுனியா மற்றும் தர்கா நகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரனும், தேன்மொழி சபாவின் ‘ஆத்திசூடிக்கதைகள்’ பற்றி வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியர் எம்.எ.முருகதாசனும் வி.ரி.இளங்கோவனின் ‘ஈழத்து இலக்கியச் சிற்பிகள்’ நூல் தொடர்பாக யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எம்.மயூரனும் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர். தொடர்ந்து மாலை 5 மணிக்கு கூத்தாட்டு அவைக்களத்தினரின் தயாரிப்பில், வி.விஜயரூபனின் நெறியாள்கையில் ‘பட்டறிவு’ மற்றும் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு.கணெசராசாவின் நெறியாள்கையில் ‘காதலுக்கு மருந்து’ நாடகமும் இடம்பெறவுள்ளது. (ச- 25)

# இழப்பீடு வழங்குவதாக பேய்க்காட்டுகிறது அரசு

## விவசாயிகள் விசனம்



**முல்லைத்தீவு, ஜன. 25**

**தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் இருந்த பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களில் இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன. இதற்கு அரசாங்கத்தால் இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்தவருடம் ஏற்பட்ட நெற்செய்கை அழிவுக்கான இழப்பீடுகளை, விவசாய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உரியவகையில் வழங்கவில்லை. ஒரு சிலருக்கு மாத்திரமே அவர்களின் வங்கிக்கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு பணம் வைப்பிலிடாமை தொடர்பில் எந்தவித பதிலும் வழங்கப்படவில்லை.

இந்த வருடமும் சீரற்ற காலநிலையால் நெற்செய்கை மிகப் பெரியளவில் அழிவடைந்துள்ளது. இம்முறையாவது உரியவகையில் நெற்பயிர் அழிவுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லையெனில் நெற்செய்கையிலிருந்து விலகவேண்டிய நிலை ஏற்படும் - என்றனர். (ச-25, 113)

# சாட்டி இந்துமயானத்தில் தகனம் செய்வதில் குளறுபடி

யாழ்ப்பாணம், ஜன.25

வேலணை சாட்டி இந்துமயானத்தில் சடலங்களைத் தகனம் செய்வதற்கு அதிகளவில் பணம் செலவிட நேரிடுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வேலணைப் பிரதேசசபையினரால் குறித்த மயானம் அமைக்கப்பட்டு மயான பரிபாலன சபையினரால் நிர்வகிக்கப்படுகின்றது. அங்கு தகனம் செய்வதாயின் பிரதேசசபையில் 5 ஆயிரம் ரூபா பணம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்ட பின்னரே தகனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றது. இதில் 2500 ரூபா தகனத்தை எரிக்கும் நபருக்கு வழங்குவதற்கென கூலியாகப் பெற்றுக் கொள்கின்றனர். எனினும் சடலத்தை மயானத்துக்குக் கொண்டு சென்றால் அங்கு எரிக்கும் நபர்கள் எவரும் இல்லாது மக்கள் ஏமாற்றப் படுகின்றனர். அதனால் அவர்களை ஒழுங்குசெய்வதற்கும் இறுதிக் காரியங்களை நிறைவேற்றுவதற்கும் 10 ஆயிரம் ரூபா முதல் 15ஆயிரம் ரூபா வரையில் செலவிடவேண்டியுள்ளது. இந்த ஏமாற்று நடவடிக்கை தொடர்பாகப் பிரதேசசபை மற்றும் மயானப்பரிபாலன சபையிடம் தெரிவிக்கப்பட்டபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-இ)

# அறநெறி ஆசிரியர்களுக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.25

அகில இலங்கை சைவ மகாசபையால் வருடாந்த தைப்பூசத்தை ஒட்டிய அன்பே சிவம் நிகழ்வை முன்னிட்டு அறநெறி ஆசிரியர்களுக்கான பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அறநெறிக் கல்வியின் முக்கியத்துவமும் சமூகமயமாக்கலும், என் கடன் பணி செய்து கிடப்பதே, ஆலயம் சமூக மையம் ஆகிய தலைப்புகள் போட்டிகளுக்குத் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்து வழங்கப்படும். அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் நகரில் போட்டிகள் ஒரே நாளில் இடம்பெறும்.

ஒருவர் மூன்று போட்டிகளிலும் அல்லது ஏதாவது ஒன்றில் பங்கேற்கமுடியும். போட்டிகளுக்கான இடம், நேரம் மற்றும் ஏனைய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படுமென அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (ச-66)



# சிறுபோகச்செய்கை கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி, பிரமந்தனாறுக்குளத்தின் கீழான சிறுபோக உபஉணவு பயிர்ச்செய்கை தொடர்பான கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளருமான எஸ்.மோகனபவன் தலைமையில் பிரமந்தனாறு கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பயிர்ச்செய்கை காலப்பகுதி, நீர் விநியோகம், கால்நடைக் கட்டுப்பாடு, வாய்க்கால் துப்புரவுப் பணிகள், கால்நடை பராமரிக்கத் தவறின் அதற்கான தண்டப்பண அறவீடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு விவசாயிகளின் ஒப்புதலுடன் பயிர்ச்செய்கை அட்டவணை தயாரிக்கப்பட்டது.

(ச-25,113)

நல்லூர் கந்தன் திருமண சேவை
எம் அன்பார்ந்த உறவுகளுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
எம் திருமண சேவையில் உள்நாட்டு மணமக்கள். வெளிநாட்டு மணமக்கள் உத்தியோகம். உத்தியோகம் இல்லாதது வெளிநாட்டு மணமகள்கள் கைவசம் உள்ளனர். எவ்விதமாயினும் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: 077 973 3183

# ‘பயணிக்கின்றன பாதைகள்’ கவிதை நூல் வெளியீடு

ஆரணியின் ‘பயணிக்கின்றன பாதைகள்’கவிதை நூல் வெளியீடு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு ‘சுவாமி தோட்டம்’ இயக்குநர் அருட்தந்தை செ.யூட் அமலதாஸ் அடிகளார், சிறப்பு விருந்தினர்களாக மூத்த கலைஞர் கலாபூசணம் செ.சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.திருமாறன், வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் எம்.பி.தீபன், யாழ். மாவட்ட சிறுவர் சம்மேளனத் தலைவர் ம. எலக்ஸ்ரின் ராஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சண்டிலிப்பாய் கிராம உத்தியோகத்தர் திருமதி ம.மாலாதேவி நூலின் வெளியீட்டுரையையும், உடுப்புக்குளம் மகாவித்தியாலய ஆசிரியர் ‘முல்லை இலக்கியச்சுடர்’ பாரதி மைந்தன் ஆய்வுரையையும் ஆற்றவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கனகாம்பிகை சிவசிவாபிள்ளை



**மறைவு: 16.01.2015**
**திதி: 25.01.2025**

பாசமிகு நிழல் பரப்பி எங்கள்
ஏற்றமிகு வாழ்விற்கு
மெழுகுவர்த்தியாய் தனையுருக்கி
ஒளி பரப்பிய எங்கள் தாயே!
எமையெல்லாம் அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து வழி நடத்திய
அந் நாட்கள் எம் நினைவுகளில்
எந்நாளும் சுழல்கின்றதே
எங்களுக்கான இலக்கணம் படைத்த
உங்களைப் பத்து அல்ல
பல நூறாண்டானாலும் மறவோமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நயினை நாகபூசணி அம்மன் பாதம்
- பணிகின்றோம்.

**குடும்பத்தினர்.**

(cs. 2349) (N-1)

---

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**
**பேருந்து நிலைய வீதியில் அமைந்துள்ள**
**பொதுமலசலகூடத்தினை**
**குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்**
**2025.02.14 - 2025.12.31**

தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 2025.02.14 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பொதுமலசலகூடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான கேள்விதாரரிடமிருந்து கோரப்படுகின்றது.

பொதுமலசலகூடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விதாரர்களை தெரிவு செய்தல்
NP/14/41/(3)/ 7/ Bus Stand Road , Puplic Toilet /
2025.02.14 - 2025.12.31

1. கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் திகதி :- 2025.01.27 - 2025.02.10 வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி :- 2025.02.11 (செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணி முன்பு )
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2025.02.11 ( செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி )
4. 2025.02.11 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஆரம்ப கேள்வித் தொகை ரூ. 20,000.00 ஆகும்.
6. மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகை ரூ. 2,000.00 செலுத்துதல் வேண்டும்.
7. மீளளிக்க முடியாத படிவக்கட்டணமாக ரூ. 2,000.00 செலுத்துதல் வேண்டும்.
8. பொதுமலசலகூடப்பாவனைக்கான நுழைவுச்சீட்டுக் கட்டணம் ரூபா 20.00 மட்டுமே ஆகும்.
9. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி. 2025.01.25

(CR/44178) J-1

---

## Sri Lanka German Training Institute

Ministry of Education
Vocational Education division
SLGTI

Renewable Energy Technology
NVQ Level 5 & 6 Courses
**Part time Training Program**

**Applications are Invited from qualified candidates who are interested in the following renewable and green energy technology courses conducted by the Sri Lanka German Training Institute Kilinochchi.**

### Key Training Areas

- Renewable energy technology
- Wind power
- Solar pv system
- Biomass energy technology
- Energy management systems
- Applied green technology

70,000/= Per year

### Related Technology Areas

According to the local and global industry requests with theoretical, lab practical and project based training. Applied integrated mechatronics based renewable energy knowledge and skills, innovations, research & development with collaborative industries.

- Time duration: 2 Years (once a week practical in Ceylon German Technical Training Institute (CGTTI) Moratuwa & Sri Lanka German Training Institute (SLGTI) Kilinochchi according to the schedule)
- Age Limit: Between 16 to 24 Years
- Eligibility: NVQ - 4 (Electrical, Electronic and Mechatronic)

Visit www. Slgti ac.lk for the course details, fees, and online application. Submit, the completed Online application. The closing date is **February 20th 2025**

**Theory class will be conducted over zoom & practical will be conducted at SLGTI Kilinochchi & CGTTI Moratuwa**

www.slgti.ac.lk THE CENTER OF EXCELENCE 0212060138 /0703060138

---

**நிர்மாண ஒப்பந்த வேலைதாரர்களைப் பதிவுசெய்தல்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை**

2025 ம் ஆண்டில் சபையின் நிர்மாண ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு பதிவினை மேற்கொள்ளவிரும்பும் நிர்மாண ஒப்பந்தகாரர்களிடமிருந்து. விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை கடமை நாட்களில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதுடன் விண்ணப்பங்கள் எதிர்வரும் 31.01.2025 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 0212241130 எனும் அலுவலக இலக்கத்துடன் தொடர்புகொள்வும்

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை.**

CR/44177) J-1

---

# குழு நிலை வகுப்பு

- தமிழ் மொழியும் இலக்கியமும் (தரம் : 6 -11)
- தமிழ் இலக்கிய நயம் (தரம் : 10 -11)
- இலக்கண இலக்கிய வகுப்பு
- வினாத்தாள் வகுப்பு
- அலகுப் பரீட்சைகள்
- தவணைப் பரீட்சைகள் நடைபெறும்

ஆசிரியர் - S.ரகுபதி தொடர்பு: 077 938 9478

(cs.57395) (N-1)

---

# வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- **இயந்திர இயக்குநர் (Machine Maintainer)**
- **உதவியாளர் (Helper)**
- பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன்
**இன்று (25.01.2025) சனிக்கிழமை**
**காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை**
**நேரில் சமுகமளிக்கவும்.**

**உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 12 . 04 . 1950
**மறைவு** 24 . 01 . 2025

## தியாகராசா கமலாதேவி (சின்னன்)

காரைநகர் சல்லையை பிறப்பிடமாகவும், காரைநகர் வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா கமலாதேவி அவர்கள் நேற்று (24.01.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு (CMK) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும், கோபிநாத் (பொறியியலாளர்) அவர்களின் பாசமிகு தாயாரும், சாந்தினி (ஆசிரியர் கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராசகுமாரி அவர்களின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்றவர்களான தில்லைநடராசா, சங்கரப்பிள்ளை, திலகவதி, பத்மாவதி, சிவஞானசுந்தரம், திருச்சிற்றம்பலம், உமாதேவி, சிவஞானம் மற்றும் லோகநாயகி அம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் வேம்படி யில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (26.01.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 06.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்படி,
**தகவல்:**
**கோபிநாத் - +94 76 762 2100**

(CS57310) J-1

---

# பாலம்!

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே பாலம் அமைப்பதன் ஊடாக பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: - கட்டாருக்கும் பஹ்ரைனுக்கும் இடையே பாலம் போடப்பட்டுள்ளது. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் இடையே பாலம் உள்ளது. அதேபோல் இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே பாலம் அமைக்கப்பட்டால் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லலாம் என்றார். (ம-6)

# நீக்கம்!

ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரான அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு வழங்கி வந்த பாதுகாப்பை திரும்பப் பெறுவதாக பஞ்சாப் மாநில பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம)

# சிறை!

பிரான்ஸில் பாரதூரமான போதைப்பொருள் குற்றவாளிகளை அடைப்பதற்காக தனியான சிறையொன்று அமைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. சிறைச்சாலைக்கு வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கின் அபிவிருத்திக்கு சுவிட்சர்லாந்து ஒத்துழைப்பு

கொழும்பு, ஜன. 25

வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு சுவிட்சர்லாந்து ஒத்துழைப்பு வழங்கும் என்று இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் ஆகியோருக்கிடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதன்போதே, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு சுவிட்சர்லாந்து தன்னாலான ஒத்துழைப்பை முழுமையாக வழங்கும் என்று சுவிட்சர்லாந்துத் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து சுவிட்சர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் இலங்கைக்கு உதவி வழங்கப்படும். அத்துடன், தேசிய ஒற்றுமை மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியவற்றை தீர்ப்பதற்கும் இலங்கையுடன் சுவிட்சர்லாந்து துணை நிற்கும் என்றும் தூதுவர் சிறி வோல்ட் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் உதவிகளுக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தனது நன்றிகளைத் தெரிவித்தார். அத்துடன், இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்கு சுவிட்சர்லாந்து தொழில்நுட்ப உதவிகளைத் தந்துதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (ம-இ)

## பெருமளவு...

பலாலியில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவாகவே இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-213)

## சுகிர்தராஜனின்...

நினைவுநாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை உவர்மலை பூங்காவில் கடைப்பிடிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், திருகோணமலை ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஊடக மன்றங்கள், இலங்கை தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலும், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஒத்துழைப்புடனும் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. நினைவேந்தலைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் படுகொலைக்கும், ஏனைய ஊடகவியலாளர்களின் படுகொலைக்கும் நீதிகோரி போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகளில் செய்திகள் மற்றும் அரசியல் பத்திகள் என்பவற்றை எழுதிவந்தார். அத்துடன், வீரகேசரிப் பத்திரிகையில் எஸ்.எஸ்.ஆர், மனோ, ரஹ்மான் ஆகிய பெயர்களிலும், மெற்றோ நியூஸ் பத்திரிகையில் ஈழவன் என்ற பெயரிலும் எழுதிவந்தார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தனது பணிக்குச் செல்வதற்குப் பேருந்துக்காகக் காத்திருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலை கடற்படை முகாமுக்குள் வைத்து, பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வெளியுலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியமைக்காகவே அவர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-50)

## யாழ். பல்கலை...

முன்வைத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விதிகளுக்குப் புறம்பாக நடைபெறுகின்ற மாணவர்கள் மீதான விசாரணைகள் உடன் நிறுத்தப்படவேண்டும், போராடுதல், கருத்து வெளிப்படுத்தல் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகள் உறுதிசெய்யப்படவேண்டும், விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகள் பாரபட்சமின்றி விசாரணை செய்யப்படவேண்டும், மாணவர்களின் கற்றலிற்கான சுதந்திரம் உறுதி செய்யப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக, பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (அ-ம-27-66-20)

## காற்றாலை...

தால் இலங்கையில் முன்னெடுக்கத் திட்டமிட்ட ஒப்பந்தங்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டுள்ளன.

அந்த ஒப்பந்தங்களை ரத்துச்செய்வதற்கு இலங்கையின் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று நேற்றுக் காலை தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதையடுத்தே, இந்த விடயம் தொடர்பில் அதானி குழுமம் சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, இலங்கையில் தம்மால் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின்திட்டங்கள்ரத்துச்செய்யப்படவில்லை என்று அதானி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் பசுமை வலுசக்தித் துறையில் ஒரு பில்லியன் டொலரை முதலீடு செய்வதில் அதானி குழுமத்தினரும், குழுமத்தின் தலைவரும் உறுதியாக உள்ளனர் என்றும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## மாமியாரைக்...

சுந்தரபுரம் பகுதியில் வசித்துவந்த சுந்தரலிங்கம் சுகந்தன் (வயது-28) என்ற குடும்பத்தலைவரே வெட்டிக் கொல்லப்பட்டவராவார்.

படுகொலைசெய்யப்பட்ட நபர் கடந்த தீபாவளி தினத்தன்று தனது மாமியாரை துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்தார். நீதிமன்றத்தால் அவருக்குப் பிணை வழங்கப்பட்ட நிலையில், நேற்றைய தினம் அவருடைய வீட்டுக்கு அருகில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் உயிரிழந்தவரின் மைத்துனர் (தீபாவளி தினத்தன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பெண்ணின் மகன்) ஈச்சங்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110-18)

## கலாசார...

'யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்' என்ற பெயரில் அந்தக் கட்டடம் 2023ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டது. இதன்பின்னர், கடந்த 18ஆம் திகதி இலங்கையின் அமைச்சர் குழுவும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்ட நிகழ்வில் 'திருவள்ளுவர் கலாசார மையம்' என முதலாவது தடவையாகப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு பெயர்ப்பலகை திறந்துவைக்கப்பட்டது.

இதையடுத்து, 'யாழ்ப்பாணம்' என்ற அடையாளப்படுத்தல் நீக்கப்பட்டமைக்குப் பலரும் தமது கண்டனத்தைப் பதிவு செய்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அந்தக் கட்டடம் 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்' என மீண்டும் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-20-125-66)

## பொலிஸாருக்கு...

பாடுகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையென 843 முறைப்பாடுகளும், அதிகார துஷ்பிரயோகம் செய்தனரென 649 முறைப்பாடுகளும், பக்கச்சார்பாகச் செயற்பட்டனரென 476 முறைப்பாடுகளும், பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பாக 202 முறைப்பாடுகளும், ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக 120 முறைப்பாடுகளும், போதைவஸ்து தொடர்பாக 95 முறைப்பாடுகளும், பொலிஸார் தாக்குதல் நடத்தினார்கள் என 65 முறைப்பாடுகளும், சட்டவிரோதமாக தடுத்து வைத்தார்களென 52 முறைப்பாடுகளும், சித்திரவதை செய்தார்களென 11 முறைப்பாடுகளும், சிறுவர்களையும் பெண்களையும் துன்புறுத்தினார்களென 326 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## நீதிமன்றத்தில்...

தனக்குப்பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள காரணத்தால், பாதுகாப்பை மீளவும் அதிகரிக்குமாறு அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்றுகோரி அந்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவுக்கு 300க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட படையணியால் பாதுகாப்பு வழங்கப்பட்டுவந்த நிலையில், ஜனாதிபதி அநுரவின் உத்தரவுக்கு அமைய அந்த எண்ணிக்கை 60ஆகக் குறைக்கப்பட்டது. இதையடுத்தே பாதுகாப்பை மீள அதிகரிக்க வேண்டும் என மஹிந்த மனுத்தாக்கல் செய்துள்ளார். (அ-ம-இ)

## சர்வதேச...

பொருளாதார முன்னேற்றத்துக்கான வடக்கின் நுழைவாயில் என்ற தொனிப்பொருளுடன் நேற்று, இன்று, நாளை என மூன்று தினங்களைக் கொண்டதாக இந்தக் கண்காட்சி இடம்பெற்றுவருகின்றது.

கண்காட்சியில் விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு, நவநாகரிகம் மற்றும் இதர தொழிற்துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களின் பொருள்கள் மற்றும் சேவைகள் இம்முறை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-66)

## இராணுவத்தினரால்...

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கும், வடக்கு மாகாண அழகக சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் வடக்கு ஆளுநரின் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே, இராணுவத்தினரால் வாழ்வாதாரம் பறிக்கப்படும் விடயத்தை வடமாகாண அழகக சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இராணுவத் தளபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி நல்லதொரு தீர்வு பெற்றுத்தரப்படும் என்று ஆளுநர் அவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான தலைமுடி அலங்காரம் மேற்கொள்ளும்போது உரிய ஒழுங்கு முறைகளைப் பின்பற்றவேண்டும் என வலியுறுத்திய வடக்கு ஆளுநர் ஒவ்வொரு அழகக நிலையத்தினருக்கும் அந்தப் பொறுப்பு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஒருசில அழகக நிலையங்கள் சட்டத்துக்கு முரணாகவும், நேரக்கட்டுப்பாடுகளை மீறியும் செயற்படுகின்றன என்ற விடயம் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இதற்கும் விரைவில் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சுகாதார மருத்துவ அதிகாரிகள், தொழிற் திணைக்களத்தினர், பொலிஸாருடன் இணைந்து உரிய தீர்வு வழங்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார். (அ-ம-66)

## அத்துமீறிய...

கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு வழங்குவதற்காக தனியான குழுவொன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடமாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகள் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் மட்டுமல்லாது, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் தமக்கு ஏற்படும் சொத்திழப்புக்கள் தொடர்பில் மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சுட்டிக்காட்டினார்கள்.

இதையடுத்தே, வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைஉள்ளடக்கிகுழுவொன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல், அரிசி தரவுகளில் பரஸ்பர வேறுபாடுகள்!

## கோப் குழுத் தலைவர் ஹர்ஷ தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.25**

**நெல் மற்றும் அரிசி உற்பத்தி தொடர்பான தரவுகளில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. தரவுகள் பிழையாக இருந்தால் தீர்மானங்களும் தவறானதாக அமையும் என்று அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அரிசி இறக்குமதிக்கு கடந்த மாதம் அனுமதி வழங்கப்பட்டு, இந்தமாதம் 10 ஆம் திகதிவரை கால வகாசம் வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறைத் திணைக்களத்தின் அதிகாரிகளை அண்மையில் அழைத்திருந்தோம். அவர்கள் குறிப்பிட்ட விடயங்களைகேட்டுஆச்சரியமடைந்தோம். 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்தத் தொகை மற்றும், 2025ஆம் ஆண்டு நெல் மற்றும் அரிசி உற்பத்தித் தொகை எதிர்பார்ப்புத் தொடர்பாக கேள்வியெழுப்பினோம்.

2024 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் 4.39 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது என்று விவசாயத் துறை அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அக்காலப்பகுதியில் 2.9 மில்லியன் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது என்று நாங்கள் குறிப்பிட்டோம். 2000ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்தத் தொகை தொடர்பில் தரவுகளைக் கோரியுள்ளேன். அதிகாரிகள் பொய்யான தரவுகளைக் குறிப்பிடுகிறார்களா? அல்லது வர்த்தகர்கள் பொய் கூறுகிறார்களா? என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். தரவுகள் பொய்யாயின் தீர்மானங்களும் தவறானதாக அமையும். ஆகவே இந்தவிடயம் தொடர்பாக ஆராயவேண்டும் என்று விவசாயத் துறை அமைச்சுக்குப் பரிந்துரைக்கின்றோம் - என்றார். (எ-இ)

# பிரபாகரனை சீமான் சந்தித்தது உண்மை

கொழும்பு, ஜன. 25

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தது உண்மை என்று பிரபாகரனின் பெறாமகன் தெரிவித்துள்ளார்.

சீமான் பிரபாகரனைச் சந்திக்கவில்லை என்றும், சீமான் பொய்ப் பரப்புரை செய்கின்றார் என்றும் அண்மைக்காலமாக பல்வேறு கருத்துக்கள் உலாவந்தன. இவ்வாறான பின்னணியிலேயே, பிரபாகரனும், சீமானும் சந்தித்தது உண்மை என்று அவருடைய அண்ணன் மகன் கார்த்திக் மனோகரன் கூறியுள்ளார். (ம)

**மணமகள் தேவை**

1976 இல் பிறந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் தற்போது இலங்கை வந்துள்ளார்.
மற்றும் உத்தியோக மணமகன், மணமகள் அதிகம் உள்ளனர்.
அன்பு திருமண சேவை
யாழ்ப்பாணம்
தொடர்பு: 0778448942
0758448942
(CS 29705) A-1

**கடை வாடகைக்கு**

யாழ். நகருக்கு அருகாமையில்
(O.L.R. Church அருகில்)
கடை (10' x 67')
வாடகைக்கு உண்டு.
077 757 0400
(CS/57293) J-1

# மன்னார் படுகொலைகள் ஐவர் விளக்கமறியலில்!

மன்னார், ஜன. 25

மன்னார் மாவட்ட நீதிமன்றுக்கு முன்பாக இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும், அடம்பனில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் ஐந்தாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, ஐவரும் நீதிமன்றக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.20 மணியளவில் மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்புள்ள கோட்டை வீதியில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் பேசாலையில் வைத்து ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார். மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் கடந்த ஆண்டு அடம்பனில் வைத்து ஒருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்.

இந்த நிலையில் இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் நேற்று மன்னார் நீதிவான் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கினார்.

சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் பேசாலையைச் சேர்ந்த மற்றொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுநேற்றுநீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இரண்டு வழக்குகளும் வரும் 29ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபர்கள்ஐவரும்அன்றுவரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-இ)

### வவுனியா சிறைச்சாலைக்குள்

# ஹெரோய்ன் கடத்திய பெண் நேற்றுக் கைது

வவுனியா, ஜன. 25

வவுனியா சிறைச்சாலைக்குள் உள்ள கைதி ஒருவருக்கு ஹெரோய்ன் கடத்த முயன்ற பெண் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ள இளம் குடும்பத் தலைவருக்காகவே அந்தப் பெண் ஹெரோய்னைக் கடத்த முயன்றார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)

**பதவி வெற்றிடம்**

யாழில் உள்ள பிரபல வைத்தியசாலையில்
பின்வரும் பதவிகளுக்காக தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றோம்.
* Maintenance Officer (பராமரிப்பு உத்தியோகத்தர்)
* Pharmacist Assistant (மருந்தக உதவியாளர்)
* Dental Assistant (பற்சிகிச்சை உதவியாளர்)
* MLT(மருத்துவ ஆய்வு கூட பரிசோதகர்)
குறிப்பு: யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக்கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 05.02.2025 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
தொடர்புகளுக்கு: 074 202 7318
3x4N-1

**நெல் அறுவடையாளர்களுக்கு**

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **நெல் சூடடிக்கும் இயந்திரம்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக்கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.
"நாங்கள் உங்களோடு"



ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917

# பெயர் மாற்றத்துக்கு தமிழரசு வரவேற்பு!

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் நிதியுதவியால் அமைக்கப்பட்ட கட்டத்தில், 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் உள்ளடக்கப்பட்டு 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டமைக்கு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். (ம-125-66)



தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 5 எஸ் தரச் சான்றுப்படுத்தல் போட்டித்தொடரில் வேலணைப் பிரதேச செயலக புங்குடுதீவு சமுர்த்திவங்கி சான்றிதழினைப் பெற்றுக்கொண்டது. (ச-25-9)

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- இயந்திர இயக்குநர் (Machine Maintainer)
- உதவியாளர் (Helper)
- பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன்
இன்று (25.01.2025) சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை
நேரில் சமூகமளிக்கவும்.
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org